# வேலூர் மாநகராட்சி

## பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய

## வரவு செலவுத் திட்டம்

# 2026 - 2027

# VELLORE CITY MUNICIPAL CORPORATION

## REVISED ESTIMATE 2025- 2026
## &
## BUDGET ESTIMATE 2026-2027

**2026 - 2027**



# திருக்குறள்

## வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
## கோல்நோக்கி வாழும் குடி.

பொருள் :

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வு மழையினால் வளம்பெறுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வு நல்லாட்சியினால் வளம் பெறுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்

## டாக்டர் மு.கருணாநிதி



## மாண்புமிகு மு.க.ஸ்டாலின்

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்



மாண்புமிகு **துரைமுருகன்**

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள்



## மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்**

### தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள்



மாண்புமிகு **கே.என்.நேரு**

**தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம்**

**நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்**



திருமதி ஆ.சுஜாதா M.A., B.Ed.,
வணக்கத்திற்குரிய மேயர்

# முகவுரை

வேலூர் மாநகராட்சியின் 2026-2027-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வழங்குவதில் மிகுந்த மற்றற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். இந்த நிதி நிலை அறிக்கை ஆணையாளர் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடன் விரிவாக கலந்தாய்வு செய்து அனைத்து தரப்பு பொது மக்கள் பயன்பெறும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாநகர மக்களின் அடிப்படை தேவைகளான சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால்வாய் வசதி, தெரு மின் விளக்கு வசதி, மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பொது அறிவிப்பு அமைப்பு(Public Address System) அமைக்கவும், பெண்களுக்கான பிரத்தியேக பிங்க் பார்க்(Pink Park) அமைக்கவும், சீர்மிகு பலகை (Smart Board) வைக்கவும், மாநகர பகுதிகளில் அனைத்து மக்கள் பயன்பெறும் விதத்தில் பூங்காக்களை மேம்படுத்துதல், பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில் விரிவான வரவு செலவு திட்டமாக அதிகரித்து ஈட்டுதலை பெருக்கி, நியாயமான செலவினங்களை பகுத்தறியவும் கொள்கைகளை பிரதிபலிக்கும் தன்மைகளை உள்ளடக்கியதாக இந்நிதி நிலை அறிக்கையினை வழங்க பெருமுயற்சி செய்துள்ளோம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கடந்த ஆண்டு செயல்படுத்திய திட்டங்களை விட நடப்பாண்டில் அதிக அளவில் திட்டங்களை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி நிலை அறிக்கையில் கடந்த ஆண்டு செயல்படுத்திய திட்டங்களையும் நடப்பாண்டில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

# வேலூர் மாநகராட்சி

## வரவு செலவு திட்டம் 2026-27

### வேலூர் மாநகராட்சியின் சுயவிவரம் (Profile):

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலூர் மாநகராட்சியின் பரப்பளவு | : | 87.915 ச.கி.மீ |
| 2. | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி | : | 504079 |
| 3. | தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) | : | 604933 |
| 4. | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 60 |
| 5. | மொத்த சொத்து வரிவிதிப்புகள் | : | 118564 |
| 6. | மொத்த குடிநீர் இணைப்புகள் | : | 64275 |
| 7. | மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் | : | 891.92 கி.மீ |
| 8. | தார்சாலை | : | 338.73 கி.மீ |
| 9. | சிமெண்ட் சாலை | : | 336.77 கி.மீ |
| 10. | பேவர் பிளாக் | : | 1.083 கி.மீ |
| 11. | மண்சாலை | : | 215.34 கி.மீ |
| 12. | மொத்த மழைநீர் வடிகால்களின் நீளம் | : | 726.63 கி.மீ |
| 13. | மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை | : | 31764 |
| 14. | பேருந்து நிலையங்கள் | : | 3 |
| 15. | மாநகராட்சி பள்ளிகள் | : | 85 |

### குடிநீர் விநியோகம்:

வேலூர் மாநகராட்சியில் உள்ள 1 முதல் 60 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 55 எம்.எல்.டி குடிநீரும், உள்ளூர் நீர் ஆதாரம் மூலம் 17.4 எம்.எல்.டி குடிநீரும்மற்றும் உள்ளூர் ஆழ்துளைக் குழாய் கிணறுகளின் மூலம் 3.77 எம்.எல்.டி குடிநீரும் ஆக மொத்தம் 76.17 எம்.எல்.டி குடிநீர் பெறப்பட்டு தினசரி 2 வார்டுகளிலும்,2 நாட்களுக்கு

ஒரு முறை 5 வார்டுகளிலும், 3நாட்களுக்கு ஒரு முறை 36 வார்டுகளிலும், 4 நாட்களுக்கு ஒரு முறை 17 வார்டுகளிலும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு தலா 126 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாநகரில் நாளது தேதிவரை 64275குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை குழாய் கிணறு, மினிமோட்டார் பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக குழாய் பராமரிப்பு பணிகள்:**

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறு, மினிமோட்டார் பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக குழாய் பராமரிப்பு மற்றும்பழுதினை சரி செய்தல் போன்ற பணிகளை உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகளை ரூ.480 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தெரு விளக்கு பராமரிப்பு

வேலூர் மாநகராட்சி 60 வார்டு பகுதிகளில் மொத்தம் 31764 எண்ணிக்கையில், கீழ்கண்டுள்ளவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | விளக்குகள் விபரங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 15 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 19646 |
| 2. | 40 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1656 |
| 3. | 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 2558 |
| 4. | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 4089 |
| 5. | 120 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1850 |
| 6. | 150 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 435 |
| 7. | 200 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 100 |
| 8. | 25 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1430 |
| | **மொத்தம்** | **31764** |

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் புதியதாக 3164 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் அமைக்கும் பணி முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களிலும் தெருவிளக்கு பணிகள் தனியார் மூலம் தனியார் கூட்டு பங்கேற்பு(PPP) திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 13452 எண்ணிக்கை 15 WATT LED தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளது. 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ளதால் தற்போது தெருவிளக்குகள் வெளிச்சம் குறைவாக உள்ளது. மேலும் நகரில் போக்குவரத்து அதிகரித்து உள்ளது. எனவே மேற்கண்ட தெருவிளக்குகள் அதிக திறன் கொண்ட 40 WATT LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.8.00 கோடி ஆகும். இப்பணியினை 2026-2027 நிதியாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் :

அரசு மற்றும் மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை(நிலை)எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை நாள்:27.07.2022 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்பேரில் வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 110 மாநகராட்சி துவக்கப்பள்ளிகள், மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 5789 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 01.09.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1 நாள்.02.11.2022 இல் தெரிவிக்கப்பட்டுள்ள படி வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 110 மாநகராட்சி துவக்கப்பள்ளிகள் மற்றும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் உணவு பரிமாறும் 149 நபர்களுக்கு மாதாமாதம் கௌரவ ஊதியம் ரூ.1500/-வீதம் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவுத் திட்டம் :**

வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு அரசாணை (4டு) எண்.56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி3) துறை நாள்.21.11.2025 ன் படி வேலூர் மாநகராட்சியில் பணிபுரியும் 2095 நிரந்தர தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் கொசுஒழிப்பு பணியாளர்களுக்கு உணவு வழங்கும் பணியானது ரு.3.25 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவு திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

**பாதாள சாக்கடை திட்டம் :**

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் 4 கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டு, அதில் முதல் கட்டமாக (PHASE –I) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்(TNUDP –III) திட்டத்தின் கீழ் ரு40.49 கோடி மதிப்பீட்டில் 10 வார்டுகளில் 47.69 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைத்து 10.28MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணிகள் முடிவுற்று 5453 எண்ணிக்கையிலான இணைப்புகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் (PHASE –II) கீழ் அலமேலுமங்காபுரம் , சத்துவாச்சாரி, சேண்பாக்கம், கொணவட்டம், கஸ்பா, மற்றும் வேலப்பாடி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்(2D) NO.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (MC.6) நாள் 17.08.2017ல் அம்ருத் 2016-2017 திட்டத்தின் கீழ் ரு.379.55 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பங்களாக பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUFISL) நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதி உதவியுடன் பணிகள் நடைபெற்று வருகிறது.இதில் 17 வார்டுகள் முழுமையாகவும், 15 வார்டுகள் பகுதியாகவும் மக்கள் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 179.730 கிமீ நீளத்தில் 179.723 நீளம் முடிக்கப்பட்டுள்ளது, 50.00MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் 40,339 பாதாள சாக்கடை குழாய் வீட்டு இணைப்புகளில் 40101 இணைப்புகள் வீட்டின் எல்லை வரை முடிக்கப்பட்டுள்ளது. வீட்டின் உள் இணைப்பு

இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 4896 இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது 91.31% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

மூன்றாம் கட்டத்தின் கீழ் (PHASE III) காட்பாடி, தாராபடவேடு, கழிஞ்சூர், தொரப்பாடி, சித்தேரி மற்றும் சின்ன அல்லாபுரம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்(MS) No.5C நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (MA2) நாள்:22.01.2018ல் அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ311.36 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUFISL)நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.இதில் 13 வார்டுகள் முழுமையாகவும், 13 வார்டுகள் பகுதியாகவும் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 248.60கிமீ நீளத்தில் 248.003 கிமீ நீளம் பணிகள்முடிக்கப்பட்டுள்ளது. 28,200 பாதாள சாக்கடை குழாய் வீட்டு இணைப்பு குழாய்களில் 28200 இணைப்புகள் வீட்டின் எல்லை வரை முடிக்கப்பட்டுள்ளது. வீட்டின் உள் இணைப்பு இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 11921 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 93.28% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

நான்காவது கட்டமாக (PHASE IV) வேலூர் மாநகராட்சியில் மீதமுள்ளதும், விடுபட்டுள்ள மண்டலம்-1ல் வார்டு 1 முதல் 3 மற்றும் 5 வரை உள்ள காட்பாடி, செங்குட்டை, கல்புதூர் பகுதி மற்றும் மண்டலம் 4-ல் வார்டு எண்:47 மற்றும் 48 வரை உள்ள அரியூர் மற்றும் சித்தேரி பகுதிகளில் உள்ள 6 வார்டுகள் முழுமையாகவும் 5 வார்டுகள் பகுதியாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 175 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைக்க வழிவகை செய்யப்பட்டு ஜல்ஜீவன் மிஷன் (JAL JEEVAN MISSION) திட்டத்தில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ.181.00 கோடியில் தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேலும் முத்து மண்டபம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் நிரேற்று நிலையம் ஆகியவற்றுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதி 2024-25:

சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் வேலூர் மாநகராட்சி பகுதிகளில் சிமெண்ட் சாலை, பயணிகள் நிழற்கூடம், உடற்பயிற்சி கட்டிடம் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள், காரிய மண்டபம், நியாயவிலை கடைகள், ஆழ்துளைக் கிணறு ஆகிய 40 எண்ணிக்கையிலான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்துள்ள ரூ.240.16 இலட்சத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 33 பணிகள் முடிக்கப்பட்டு மீதம் உள்ள 7 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## அம்ருத் திட்டம்:

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பகுதி-I தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (TNUDP III) 2008-2015 திட்டத்தின் கீழ் ரூ.40.49 கோடி மதிப்பீட்டில் 48.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைக் குழாய் அமைத்து 10.28 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது

இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் கீழ் அம்ருத் 2016-17 திட்டத்தின் கீழ் ரூ.690.91 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUFISL)நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதியுதவியுடன் 421 கி.மி நீளமும் 50.00 MLD(STP) கொள்ளளவு கொண்டு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 07.10.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 419.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைக் குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. நிலுவையில் உள்ள 0.50 கி.மீ நீளம் உள்ள பாதாள சாக்கடைக் குழாய் பணிகள் மற்றும் 50 MLD சுத்திகரிப்பு நிலையம், இதரப் பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அம்ருத் 2.0 திட்டம் :

வேலூர் மாநகராட்சி மண்டலம் 1, அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 2023-24 ம் நிதியாண்டில் 24X7 குடிநீர் விநியோக செய்வதற்கு முன்மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மண்டலம் 19 ல் அம்மா உணவகம் அருகிலுள்ள 20 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் மண்டலம் 20 ல் மின்சார வாரிய குடியிருப்பு அருகில் உள்ள 10 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து மாவட்ட

அளவீட்டு பகுதி(District Metering Areas),SCADA வசதியுடன் குடிநீர் 24 மணி நேரமும் விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள அரசாணை எண்.148, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.22.11.2023ன் படி ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின் திருத்தப்பட்ட அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.20.05.2024ன் படி மதிப்பீடு தொகை ரூ.13.69 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அம்ருத் நிதி 2024-25 நிதியாண்டிலிருந்து மேற்கொள்வதற்கு பணியாணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேலும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வாரம் 7 தினங்களுக்கும் முழு நேரமும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு பிரேரனை தயார் செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது.

## நமக்கு நாமே திட்டம் 2025-2026:

வேலூர் மாநகராட்சிக்கு 2025-2026 நமக்கு நாமே திட்டத்தின் கீழ் இரண்டு பணிகள் தேர்வு செய்து ரூ.82.73 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற கடிதம் அனுப்பபட்டுள்ளது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2022-23:

15வது நிதிக்குழு மான்யம் 2022-23ன் கீழ் ரூ.39.71 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் என 67 பணிகள் எடுக்கப்பட்டு 50 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 29 சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 20 பணிகள் முடிவடைந்து9 பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2023-24:

15வது நிதிக்குழு மான்யம் 2023-24ன் கீழ் ரூ.21.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சாலை பணிகள் போன்ற 32 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 23 பணிகள் முடிக்கப்பட்டு 9 பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## 15வது நிதிக்குழு மான்யம் 2025-26:

### சாலைப் பணிகள்:

15வது நிதிக்குழு மான்யம் 2025-26ன் கீழ் ரூ.5.60 கோடியில் 78சாலை பணிகள் எடுக்கப்பட்டு அதில் 70 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

### மழைநீர் வடிகால் பணிகள்:

15வது நிதிக்குழு மான்யம் 2025-26ன் கீழ் 54 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## தேசிய நகர்புற சுகாதார திட்டம் 2022-23:

தேசிய நகர்புற சுகாதார திட்டம் 2022-2023 கீழ் 28 எண்ணிக்கையில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டும் பணி ரூ.12.27 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 28 பணிகளும் முடிக்கப்பட்டு தற்போது அவைகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

## தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2025-2026:

1. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் (கட்டம்-1) 2025-26ன் கீழ் ரூ.8.79 கோடியில் 86 சாலை பணிகள் எடுக்கப்பட்டு அதில் 74 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
2. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் (கட்டம்-2) 2025-26ன் கீழ் ரூ.16.14 கோடியில் 181 சாலை பணிகள் எடுக்கப்பட்டு அதில் 165 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
3. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் (கட்டம்-3) 2025-26ன் கீழ் ரூ.13.01 கோடியில் 167 சாலை பணிகள் எடுக்கப்பட்டு அதில் 153 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
4. தற்போது தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2025-26ன் கீழ் ரூ.24.58 கோடியில் 448 சாலை பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கும் தருவாயில் உள்ளது.

**தூய்மை பாரத திட்டம்:**

1. தூய்மை பாரத திட்டம் (SBM 2.0) திட்டத்தின் கீழ் 3 எண்ணிக்கை நுண்ணுயிர் செயலாக்க மையங்கள் கட்டுதல், 13 எண்ணிக்கை பொருள் மீட்பு வசதி (Material Recovery Facility - MRF) கட்டுதல் மற்றும் 16 எண்ணிக்கை கழிப்பிட கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகள் ரு.11.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 32 பணிகளில் 23 பணிகள் முடிக்கப்பட்டு 9 பணிகள் நடைபெற்று வருகிறது.
2. தூய்மை பாரத திட்டம் (SBM 2.0) 2025-2026 திட்டத்தின் கீழ் ரு.11.00 கோடியில் தாராபடவேடு, காகிதப்பட்டறை, சதுப்பேரி உரக்கிடங்கில் தேங்கியுள்ள தேக்க கழிவுகளை அகற்றும் பணிகள் எடுக்கப்பட்டு பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது.

**நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2025-2026:**

மாநில நிதிக்குழு ஆணையம் - நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் (2025-2026)கீழ் ரு.2.50 கோடியில் 22 சாலை பணிகள் எடுக்கப்பட்டு அதில் 16 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

**மூலதன மானிய நிதி மற்றும் பற்றாக்குறை மானிய நிதி2025-2026:**

மாநில நிதிக்குழு ஆணையம் - மூலதன மானிய நிதி மற்றும் பற்றாக்குறை மானிய நிதியின் (2025-2026)கீழ் ரு.0.214 கோடியில் 7 பள்ளிகள் சீரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## புதிய முன்மொழிவுகள்

**சாலைகள்:**

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் உள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றுதல் பழுதடைந்துள்ள தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக ரு.52.00 கோடி மதிப்பீடுகளுக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கையில் உள்ளது.

## கல்வி நிதி:

வேலூர் மாநகராட்சி மண்டலம் 2 -ல் 2025-2026ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.2.50 கோடியில் முதல்வர் படிப்பக கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## சிமெண்ட் சாலை சீரமைத்தல்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 336.77 கி.மீ சிமெண்ட் சாலை உள்ளது. இதில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டத்தினால் 30% சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. பாதாள சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் சாலை செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி சிமெண்ட் சாலைகளை செப்பனிடும் பணிகளுக்கு ரூ.25.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

## தார்சாலை சீரமைத்தல்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 338.73 கி.மீ தார் சாலை உள்ளது. இதில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டத்தினால் 30% சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளது. பாதாள சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் சாலை செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி தார் சாலைகளை செப்பனிடும் பணிகளுக்கு ரூ.42.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

## மழைநீர் வடிகால் சீரமைத்தல்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 726.63 கி.மீ மழைநீர் வடிகால் உள்ளது. இம்மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 60 வரையுள்ள பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களை சீரமைத்தல் மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகளுக்கு தற்போது தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.9.68 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

## தலைமை நீரேற்றும் நிலையம்

### தலைமை நீரேற்று நிலையம்:

வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமானஅனைத்து தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நீர்உந்து நிலையங்களில் பராமரிப்பு பணி மற்றும் புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் 15வது மத்திய நிதி ஆணையம் - பிணைக்கப்பட்ட மானியத்தின் (Tied Grant) கீழ் செயல்படுத்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### மேல்நிலை நீர்தேக்க தொட்டி :

சேண்பாக்கத்தில் பழுதான நீர்தேக்க தொட்டியை இடித்து விட்டு புதியதாக மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வார்டு எண்.40 ல் புதியதாக ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### அலுவலர்கள் குடியிருப்பு:

இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 கோடியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### சுற்றுசூழல் பூங்கா (ECO Park):

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக சுற்றுசூழல் பூங்காக்கள் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.00 கோடியில் ஆரோக்கியமான சுற்றுச் சூழல் பேண நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### ஏரிகள் மேம்பாட்டு பணிகள்:

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட ஒட்டேரி, பலவன்சாத்து மற்றும் வேலவாடி ஏரிகளை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள சுமார் ரூ.94.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று அதனை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## நிறுவனங்களின் சமூக பொறுப்பு செயல்பாடுகள் (CSR Activities):

இம்மாநகராட்சியின் சீரிய முயற்சியால் கீழ்கண்ட வங்கிகள் தங்களின் நிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) நடவடிக்கையாக இம்மாநகராட்சியில் செயல்படுத்திய விவரங்கள்:

### 1. பெடரல் வங்கி:

1. இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்காக திடக்கழிவுகளை துண்டு துண்டாகவும், பொடி பொடியாக்கவும் ரூ.7.96இலட்சம் செலவில் 01 எண்ணிக்கையில் திடக்கழிவுகள் துகலாக்கம் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### 2. சிட்டி யூனியன் வங்கி:

1. முதல்வரின் காலை உணவுத்திட்டத்தில் உணவருந்தும் குழந்தைகள் பயன் பெறும் வகையில் ரூ.2.25இலட்சம் மதிப்பில், சமையலுக்கு தேவையான குடிநீருக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
2. வேலூர் மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக 5 எண்ணிக்கையில் கணினி இயந்திரங்களும் 5 எண்ணிக்கையில் அச்சுஇயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

### 3. .ஐ.டி.பி.ஐ வங்கி:

1. இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்காக திடக்கழிவுகளை துண்டு துண்டாகவும், பொடி பொடியாக்கவும் ரூ.7.96இலட்சம் செலவில் 01 எண்ணிக்கையில் திடக்கழிவுகள் துகலாக்கம் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### 4. கோடக் மஹிந்திரா வங்கி:

1. இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்காக திடக்கழிவுகளை துண்டு துண்டாகவும், பொடி பொடியாக்கவும் ரூ.15.00இலட்சம் செலவில் 02 எண்ணிக்கையில் திடக்கழிவுகள் துகலாக்கம் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### 5. இந்தியன் வங்கி:

1. இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்காக திடக்கழிவுகளை துண்டு துண்டாகவும், பொடி பொடியாக்கவும் ரூ.7.96இலட்சம் செலவில் 01 எண்ணிக்கையில் திடக்கழிவுகள் துகலாக்கம் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

**6.எச்.டி.எப்.சி வங்கி:**

1. இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்காக திடக்கழிவுகளை துண்டு துண்டாகவும், பொடி பொடியாக்கவும் ரூ.39.80 இலட்சம் செலவில் 05 எண்ணிக்கையில் திடக்கழிவுகள் துகலாக்கம் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
2. இம்மாநகராட்சி பகுதிகளில் ரூ.15.00 இலட்சம் மதிப்பிலான 50 எண்ணிக்கையில் சூரிய ஒளி விளக்குகள் (சோலார் பல்புகள்)மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.
3. இம்மாநகராட்சி பகுதிகளில், பொது சுகாதாரம் மேம்படவும், டெங்கு மலேரியா போன்ற பல நோய்கள் கொசுக்களால் ஏற்படுவதை தடுக்கும் வகையில் ரூ.1.50 இலட்சம் மதிப்பிலான 5 எண்ணிக்கையில் கொசு ஒழிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய திட்டங்கள்:**

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மண்டல குழு தலைவர்கள், வருவாய் மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வழங்கிய முன்மொழிவின்படி, புதிய திட்டங்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை, வரும் ஆண்டில், அரசு அவ்வப்போது வழங்கும் மானியம் மற்றும் இம்மாநகராட்சியின் நிதி நிலை மேம்படும் போது, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023-க்கு உட்பட்டு, பொது நிதியிலிருந்தும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

1. வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலத்திற்கும் தலா ஒரு எண்ணிக்கையில் பெண்களுக்கான பிரத்யேக பிங்க் பார்க் (PINK PARK)அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
2. வேலூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களில் உள்ள மாநகராட்சிக்குட்பட்ட 85 பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பொது அறிவிப்பு அமைப்பு (Public Address System)அமைத்து தர திட்டமிடப்பட்டுள்ளது.
3. வேலூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களில் உள்ள பகுதிகளில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள பூங்காக்களில் மின்விளக்கு மற்றும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மண்டலம்-1 :

4. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1-ல் அமைந்துள்ள உழவர் சந்தையில் புதியதாக ஒரு வணிக வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
5. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 7 ல் உள்ள - வ.உ.சி பூங்கா பகுதியில் புதியதாக ஒரு வணிக வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
6. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 8 ல் உள்ள – தாராபடவேடு மேல்குளம் சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
7. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 4 ல் உள்ள – செங்குட்டை மேல்நீர்தேக்கத் தொட்டி பகுதியில் சுற்றுச்சுவர் மற்றும் பேவர்பிளாக் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
8. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1க்குட்பட்ட பகுதிகளில் அம்ருத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள 23 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளுக்கும் பேவர் பிளாக் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
9. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 8 ல் உள்ள – குளக்கரை பள்ளியில் திறன் வகுப்பறை (Smart Class Room) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
10. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 9 ல் உள்ள - காந்திநகர் 1வது கிழக்கு அணுகு சாலையில், சாலை ஓர பூங்கா அமைத்து, தடுப்பு வேலியுடன் கூடிய விளையாட்டு உபகரணங்கள் நிறுவதிட்டமிடப்பட்டுள்ளது.
11. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 8 ல் உள்ள – சித்தூர் பேருந்து நிலையத்தில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
12. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 9 ல் உள்ள – பகுதியில் உள்ள பெரியார் சிலை மற்றும் காமராஜ் சிலை சென்டர் மீடியன்களை அழகு படுத்தும் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
13. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1ல் நெடுஞ்சாலை மத்தியில் உள்ள தெருவிளக்கிற்குரிய மின்பாதை (Cable) புதியதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
14. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1 –ல் அமைந்துள்ள தாராபடவேடு ஏரி சுற்றுலாபகுதி மற்றும் கழிஞ்சூர் ஏரி சுற்றுலா பகுதியில் கழிப்பிடம் மற்றும் பூங்கா அமைத்து, அவ்விடங்களை மக்களை கவரும் வண்ணம் அழகு படுத்தவும், மக்களின் பயன்பாட்டை மேம்படுத்தவும்திட்டமிடப்பட்டுள்ளது.

15. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 13 - கழிஞ்சூர் பகுதியில் காரியமேடை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

16. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1 க்குட்பட்ட கழிஞ்சூர் பகுதியிலுள்ள டோபிகானாவிற்காக புதிய கட்டிடம் ஒன்று கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

17. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 8 ல் – தாராபடவேடு கங்கையம்மன் கோவில் அருகில் சமுதாய கூடம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

18. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1 க்குட்பட்ட பகுதியில் குடிநீர் வாகனம் இல்லாததால் புதியதாககுடிநீர் வாகனம், தூய்மை பணிகள் மேற்கொள்ள சாலை துப்புரவு படுத்தும் வாகனம்(Road Sweeping Machine), மற்றும் நீர் உறிஞ்சும் வாகனம் வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

19. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 8ல் – பவானி நகர் குளக்கரையில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் கழிப்பிடம் மற்றும் குளியலறை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

20. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1க்குட்பட்ட காந்திநகர் (மேற்கு) பள்ளியில் Smart Class குப்பைத் தொட்டி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

21. வேலூர் மாநகராட்சி, மண்டலம் -1க்குட்பட்ட தாராபடவேடு மற்றும் கழிஞ்சூர் ஏரி பகுதியில் குப்பை சிதறலைத் தடுக்க குப்பைத் தொட்டி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

22. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 1ல் அம்பேத்கர் பகுதியில் சமுதாய கூடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

23. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 1ல் உள்ள குளர் குட்டைக் குளம் சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

24. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 10ல் உள்ள சாமிநகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

25. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 10ல் உள்ள கங்கையம்மன் கோயில் அருகில் காரியமேடை அமைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

26. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 12 ல் கோபாலசமுத்திரம் மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் சாலைகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

27. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 12 ல் பாலாஜி நகர் பகுதியில் நூலகம் ஒன்றை பொது மக்களின் பயன்பாட்டிற்காக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

28. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 6 ல் சோலை நகர் பகுதியில் சமுதாய கூடம் ஒன்றைஅமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
29. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 2 ல் பெரியபுதூர், பள்ளிகுப்பம், நடுமோட்டூர், கிழ்மோட்டூர் பகுதியில் நூலகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
30. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 6ல் ஜோதி நகர் பகுதியில் நூலகம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
31. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 13ல் கழிஞ்சூர் மெயின் சாலை மந்தைவெளி மற்றும் பள்ளிகூடம் அருகில் பேருந்து நிறுத்தம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
32. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 15ல் காளியம்மன் கோவில் அருகில் விளையாட்டு உபகரணங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
33. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 15ல் உருது பள்ளியில் திறன் வகுப்பறை (Smart Class Room)அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
34. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 14ல் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் நகர்புற துணை சுகாதார நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
35. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட காந்திநகர் பழைய பேரூராட்சி அலுவலகத்தை இடித்துவிட்டு புதியதாக அலுவலக கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
36. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட தாராபடவேடு அலுவலகத்தில் கூடுதல் அலுவலக கட்டிடம் மூன்றாவது தளத்தில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
37. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட ஆண்டாள் நகர் பகுதியில் அமைந்துள்ள கால்வாயில் பாலங்கள் மற்றும் தடுப்பு சுவர் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
38. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1-க்குட்பட்ட சோழா கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
39. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1-ல் அமைந்துள்ள வண்றந்தாங்கல் ஏரியில் கழிவு நீர் கலக்காமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.
40. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1-ல் விருதம்பட்டு பாலாற்றில் கழிவு நீர் செல்லாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

41. வேலூர் மாநகராட்சி, வார்டு 3ல் பர்னீஸ்புரம் பகுதியில் உள்ள பூங்கா இடத்தில் உடற்பயிற்சி கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

42. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட தாராபடவேடு பகுதியில் அமைந்துள்ள சந்தையில் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்காக பொதுக்கழிப்பிடம் மற்றும் உடை மாற்றும் அறை அமைத்துத் தர திட்டமிடப்பட்டுள்ளது.

43. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட கீழ்மோட்டூரில் உள்ள குளம் மறுச் சீரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

44. வேலூர் மாநகராட்சி, வார்டு 3ல் அசோக்நகர் பகுதியில் சமுதாய கூடம் ஒன்றை அமைத்துதர திட்டமிடப்பட்டுள்ளது.

45. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட காந்தி நகர் 6வது மேற்கு மெயின் சாலையில் புதிய வணிக வளாகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**மண்டலம்-2 :**

46. வேலூர் மாநகராட்சி மண்டலம் - 2 க்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள 11 துவக்கப்பள்ளி, 6 நடுநிலைப்பள்ளி மற்றும் 2 மேல்நிலைப்பள்ளிகளுக்கு பழைய கட்டிடங்களின் மராமத்து பணி மேற்கொள்வதுடன் பழுதடைந்துள்ள வகுப்பறைகளை அப்புறப்படுத்துவடன் புதியதாக கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு கழிவறை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

47. வேலூர் மாநகராட்சி வார்டு எண்.28-ல் உள்ள எல்.ஐ.சி நகரில் ஏற்கனவே பூங்கா அமைக்கப்பட்டுள்ள இடம் போக எஞ்சியுள்ள இடத்தில், புதியதாக பொன்னை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெற, தரைமட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைத்து வார்டு 28-ல் உள்ள டான்சி (Tansi)பின்புற மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கும் சைதாப்பேட்டை அருகந்தம் பூண்டிமேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கும் குடிநீர் அனுப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

48. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்.27-ல் உள்ள 1வது மற்றும் 2வது பிரதான சாலைகளின் மையத்தில் ஓடையின் குறுக்கே உள்ள சிறுபாலங்களை சீரமைத்து புதியதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

49. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்.26-ல் உள்ள பிரதான சாலையில் பழுதடைந்துள்ள பாலத்தினைநீக்கி விட்டு புதியதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

50. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்.18,20,28 ஆகியவற்றில் உள்ள மயானங்களுக்கு சுற்றுசுவர், மின்பவர் பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அவற்றிக்கான சுற்றுசுவர் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

51. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-க்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள மழைநீர் ஓடைகளுக்கு ஆர்.சி.சி பக்கசுவர் அமைத்து பக்க சுவர்களை பலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

52. வேலூர் மாநகராட்சி, 15 வார்டுகளில் உள்ள பழுதடைந்துள்ள காரிய மண்டபங்களை புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

53. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-க்குட்பட்ட மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் சாரதி மாளிகை வணிக வளாகத்தினை பழுது பார்த்து புதுப்பித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

54. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-க்குட்பட்ட நேதாஜி காய்கறி அங்காடியில் உட்புறபாதைகள் மற்றும் வெளிப்புற சாலைகள் அமைத்து பராமரித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

55. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-க்குட்பட்ட நேதாஜி காய்கறிஅங்காடி முகப்பில் உள்ள மணிகூண்டினை பராமரித்து மீண்டும் பழைய படி இயங்க வைக்கும் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

56. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 54 பூங்காக்களை பராமரித்து பணிகள் மேற்கொள்வதுடன் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளாமல் விடுபட்ட பூங்காக்களுக்கு புதியதாக புல்தரை, நடைபாதைகள், சுற்றுசுவர் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

57. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்.35-ல் ராமர் பஜனை கோயில் தெருவில் புதிய கழிப்பிடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

58. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2-ல் தற்போதுள்ள மண்டல அலுவலகத்தில் உள்ள மண்டல குழு கூட்ட அரங்கத்தின் முதல்தளத்தில் புதியதாக கூடுதல் அலுவலக கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மண்டலம்-3 :

59. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3 க்குட்பட்ட ஓட்டேரி, கீழ்மொணவூர் மற்றும் இறைவன்காடு தலைமை நீரேற்று நிலையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

60. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 37ல் சமுதாயக் கூடம் பராமரிப்பு பணிகள் மற்றும் புதியதாக பூங்கா ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

61. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 44ல் கிருஷ்ணா நகர் பூங்கா மற்றும் ரிஜிஸ்டர் பெரியசாமி தெருவில் சமுதாயக்கூடம் ஆகியவற்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

62. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 46ல் சூளைமேட்டில் சமுதாயக் கூடம், காரிய மண்டபம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

63. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 47ல் பெருமாள் கோவில் தெரு மற்றும் வேலப்பாடி சுடுகாடு அருகில் உள்ள இடத்தில் பூங்கா பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

64. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 50ல் ராஜிவ் காந்தி நகர் வணிகவளாகம் அமைத்தல், தந்தை பெரியார் நகரில் சமுதாயக் கூடம் அமைத்தல், ஔவையார் தெருவில் உடற்பயிற்க் கூடம் அமைத்தல் மற்றும் நியாய விலை கடைக்கான கட்டிடம் கட்டுதல்போன்றபணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

65. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 51ல் ஆரணி ரோடு சாய்நாதபுரத்தில் வணிக வளாகம் அமைத்தல், புண்ணியக்கோட்டி தெருவில் சமுதாயக் கூடம் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

66. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 52ல் பாலமதி மெயின் ரோட்டில் குளம் தூர்வாருதல், சிறு பாலம் அமைத்தல், நியாய விலைக் கடைக்கான கட்டிடம் கட்டுதல், கன்னிக் கோயில் பகுதியில் தடுப்பு அணைக் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

67. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 53ல் குளவிமேடு பகுதியில் உள்ள சமுதாயக் கூடம் புதுப்பித்தல், பள்ள இடையம்பட்டியில் அரசு சுகாதார மையத்தை இடித்து விட்டு புதியதாக சமுதாய கூடம் ஒன்றை அமைத்தல், சாமி நகர் பகுதியில் நியாய விலைக் கடை அமைத்தல், ஒன்றாவது குளவிமேடு பகுதியில் கீழ் நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல், குளவிமேடுதொடக்கப்பள்ளியில் புதிய

கழிவறைகள், சுற்றுசுவர் அமைத்தல் மற்றும் குளவிமேடு பகுதியில் காரிய மேடை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

68. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 55ல் பாரதியார் நகரில் பழைய சமுதாயக் கூடத்தை அகற்றி புதியதாக ஒரு சமுதாயக் கூடம் கட்டும்பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

69. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 55ல் புதியதாக தூய்மை பணியாளர்களுக்கான வார்டு அலுவலகம், மேல் நிலை நீர்தேக்க தொட்டி, மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் சிறு பாலம், நவீன காரிய மேடை மற்றும் மாயான சுற்று சுவர் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

70. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 36ல் பில்டர்பெட் டேங்க்கில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டவும் மற்றும் பூங்கா அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

71. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 36ல் பில்டர்பெட் டேங்க்கில் சுற்றுசுவர் மற்றும் புதியதாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.

72. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 54ல் இரத்தினகவுண்டர் தெருவில் அமைந்துள்ளகுளத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல், மழைநீர் கால்வாய், அரசு கலைக்கல்லூரி எதிரில் உள்ள நூலகம் புதுப்பித்தல் போன்ற பணிகள்மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

73. வேலூர் மாநகராட்சி, வார்டு எண் 57ல் நீர் தேக்க தொட்டி, சிறு பாலம், மழைநீர் கால்வாய், பள்ளி கட்டிடம் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

74. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்.45 வேலப்பாடி பகுதியில் அமைந்துள்ள பழைய அலுவலகத்தைப் புதுப்பித்து வணிக வளாகம் மற்றும் சிறு பாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மண்டலம்-4 :**

75. வேலூர் மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு எண்:16ல் சேண்பாக்கம் பகுதியில் உள்ள பழுதடைந்த குடிநீர் மேல்நீர் தேக்க தொட்டியினை அகற்றி புதியதாக 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை தொட்டி ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

76. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:16ல் சேண்பாக்கம் பச்சையம்மன் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, மற்றும் காமராஜர் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

77. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:17முத்துமண்டபம் பகுதியில் புதியதாக பொதுக்கழிப்பிடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

78. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:17முத்து மண்டபம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றி சுற்றுசுவர் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

79. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:17ல் கன்சால்பேட்டை காந்தி நகர் பகுதியில் உள்ள பழுதடைந்த கழிப்பிடத்தினை அகற்றி புதியதாக பொதுக்கழிப்பிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

80. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:17ல் அம்பேத்கர் நகர், காளியம்மன் கோயில் மெயின் தெரு, சீனிவாசன் நகர், கன்சால்பேட்டை, இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் சாலை மற்றும் சிறுபாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

81. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:32ல் அப்துல்லா சாகிப், ஆதம் சாகிப் மற்றும் யாசின் சாகிப் தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

82. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:33ல் பத்மாவதி நகர் முதல் சமத் நகர் வரை உள்ள கால்வாய்க்கு இரு புறமும் பக்கசுவர் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

83. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:33ல் பர்மாகாலனி பகுதியில் பயன்பாட்டில் இல்லாத பொதுக்கழிப்பிடத்தினை மாற்றி இளைஞர்கள் பயன்படுத்தும் வகையில் உடற்பயிற்சி கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

84. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:33 பர்மாகாலனி வசந்தபுரம் சாலையில் உள்ள பழுதடைந்த பாலத்தினை அகற்றி புதிய பாலம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

85. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:33ல் இரங்கசாமி நகர் பகுதியில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை தொட்டி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

86. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:40ல் பயர் லைன் சித்தார்த்தர் தெரு பகுதிகளுக்கு வசந்தபுரம் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் விநியோக குழாய் புதியதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

87. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:40ல் டிட்டர்லைன் உருது பள்ளியில் பழுதடைந்த சமையலறையினை அகற்றி புதியதாக சமையல் கூடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

88. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:40ல் மாசிலாமணி பள்ளியில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தைஅகற்றி புதியதாக அங்கன்வாடி கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

89. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:40ல் மாசிலாமணி பள்ளியில் கூடுதலாக, புதியதாக வகுப்பறை கட்டிடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

90. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:41ல் சின்னையா லே அவுட் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

91. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:42ல் காதர்வலி ஐன்டா தெரு மற்றும் பச்சையப்பன் தெரு ஆகியவற்றில் சிறுபாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

92. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:43ல் பழைய டானா தெருவில் சிறுபாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

93. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:48ல் சின்ன அல்லாபுரம் மாநகராட்சி பள்ளியில் உணவு கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

94. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:48 சின்ன அல்லாபுரம் மாநகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

95. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:49ல் அரியூர் வசந்தம் நகர் மற்றும் வசந்தம் நகர் விரிவு ஆகிய பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

96. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:49ல் நடவழியம்மன் கோவில் தெரு, மாரியம்மான் கோவில் தெரு, ஜீவா நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

97. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:49ல் திரௌபதி அம்மன் கோவில் தெரு, சின்ன அகமேடு மற்றும் நடவழியம்மன் கோயில் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோக குழாய் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

98. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:56ல் ராம்சேட் நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆரம்பபள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் விழா மேடை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

99. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:56ல் காவலர் குடியிருப்பு பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

100. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:56 ஆசத் ரோடு மற்றும் காந்திஜி ரோடு 2,4-ற்கு சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

101. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:58ல் திருவள்ளுவர் நகர் பகுதியில் புதியதாக சமுதாய கூடம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

102. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:58ல் அரியூர் பகுதியில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

103. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:58ல் திருவள்ளுவர் நகர் மற்றும் ஜி.வி நகர் பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

104. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:59ல் முருகர் கோயில் தெரு மற்றும் கோயில் மானியம் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

105. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:60ல் இராமலிங்கம் நகர், காளிகாபுரம் ஊசூர் அம்மன் கோயில் ஆகிய பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

106. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:32 பழைய நகர்புற நல்வாழ்வு மைய கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதியதாக சமுதாய கூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

107. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:31ல் பழைய கிராம நிர்வாக அலுவலகம் அருகில் புதியதாக வணிகவளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

108. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4 அலுவலகத்தில் இட வசதியை மேம்படுத்த முதல் மாடி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

109. வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4-ல் உள்ள அனைத்து பூங்காக்களிலும் பராமரிப்பு பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

110. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:60ல் இராமலிங்கம் நகர், ஆறுமுகம் நகர், ஜெயராம் நகர், மூவேந்தர் சாலை மெயின் ரோடு (7 குறுக்கு தெரு), காளிகாபுரம் ஊசூர் அம்மன் கோவில், முப்பனார் நகர் ஆகிய பகுதியில் புதிய சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

111. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:41ல் அமைந்துள்ள மாநகராட்சி பள்ளி மைதானத்தை விளையாட்டு துறையிடம் அனுமதி பெற்று அரசு நிதி பெற்று விளையாட்டுத் திடல் அமைக்க நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

112. வேலூர் மாநகராட்சி, வார்டு எண்:31 கொணவட்டம் பெங்களூர் சாலையில் மாநில நெடுஞ்சாலை சார்பில் சாலை விரிவாக்கம் செய்யப்பட்டு மைய திட்டு அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சாலை மையதிட்டில் தெருவிளக்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## வேலூர் மாநகராட்சி

**இம்மாநகராட்சியின் 2026-2027 ஆம் ஆண்டுக்கான நிதிவாரியான மொத்த வரவினங்கள் மற்றும் செலவினங்களின் விவரம் பின்வருமாறு:**

**வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி ஆகிய நிதிகளின் வரவினம் மற்றும் செலவின சுருக்கம்**

| விவரம் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| வருவாய் வரவினம் | 19810.05 | 6510.98 | 1040.43 | 27361.46 |
| மூலதன வரவினம் | 42061.00 | 15801.00 | 150.00 | 58012.00 |
| மொத்தம் | 61871.05 | 22311.98 | 1190.43 | 85373.46 |
| வருவாய் செலவினம் | 25001.02 | 7893.85 | 432.33 | 33327.20 |
| மூலதன செலவினம் | 36852.15 | 14393.05 | 594.83 | 51840.03 |
| மொத்தம் | 61853.17 | 22286.90 | 1027.16 | 85167.23 |
| உபரி | 17.88 | 25.08 | 163.27 | 206.23 |






# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## REVENUE FUND & CAPITAL FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | Rs.in Lakhs | | |
| 1 | Tax Revenue | 110 | 3548.51 | 3477.19 | 3811.00 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 805.00 | 929.79 | 780.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 1405.12 | 1324.79 | 1602.60 |
| 4 | Fees & User Charges | 140 | 1453.65 | 1938.86 | 2183.00 |
| 5 | Sale & Hire Charges | 150 | 51.00 | 44.85 | 48.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 9775.00 | 9358.61 | 9620.00 |
| 7 | Income from Investments | 170 | 1000.30 | 1950.45 | 1200.45 |
| 8 | Interest Earned | 171 | 650.00 | 400.00 | 500.00 |
| 9 | Other Income | 180 | 10.00 | 58.80 | 65.00 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **18698.58** | **19483.34** | **19810.05** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 33801.20 | 24976.00 | 42061.00 |
| 12 | Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **33801.20** | **24976.00** | **42061.00** |
| | **Total Receipts** | | **52499.78** | **44459.34** | **61871.05** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## REVENUE FUND & CAPITAL FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 12211.06 | 10124.95 | 8909.00 |
| 15 | Administrative Expenses | 220 | 795.77 | 422.87 | 552.75 |
| 16 | Operations & Maintenance | 230 | 3051.50 | 5506.05 | 8230.00 |
| 17 | Interest & Finance Charges | 240 | 18.18 | 8.47 | 6.77 |
| 18 | Programme Expenses | 250 | 102.50 | 21.00 | 102.50 |
| 19 | Grants, Contribution and Subsidies | 260 | 20.50 | 20.50 | 23.00 |
| 20 | Loans, Advances and Deposits | 460 | 0.00 | 87.00 | 106.00 |
| 21 | Other Liabilities | 350 | 9976.47 | 6311.12 | 7071.00 |
| | **Total** | | **26175.98** | **22501.96** | **25001.02** |
| | **Payments (Capital)** | | | | |
| 22 | Other Liabilities | 350 | 400.00 | 200.00 | 300.00 |
| 23 | Grants, Contribution and Subsidies | 260 | 20.50 | 0.00 | 0.00 |
| 24 | Repayment of Secured Loans | 330 | 18.00 | 20.40 | 22.12 |
| 25 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 26 | Accumulated Depreciation | 411 | 5233.89 | 5288.85 | 5347.03 |
| 27 | Fixed Assets | 410 | 18967.50 | 15228.00 | 15733.00 |
| 28 | Project in Progress Specific Grants | 412 | 1500.00 | 1100.00 | 1400.00 |
| 29 | Project in Progress Special funds | 412 | 100.00 | 100.00 | 14000.00 |
| 30 | Loans, Advances and Deposits | 460 | 63.69 | 1.00 | 50.00 |
| | **Total** | | **26303.58** | **21938.25** | **36852.15** |
| | **Total Payments** | | **52479.56** | **44440.21** | **61853.17** |
| | **Surplus/(Deficit)** | | **20.22** | **19.13** | **17.88** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## WATER SUPPLY AND DRAINAGE FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | **Rs.in Lakhs** | | |
| 1 | Tax Revenue | 110 | 1984.46 | 1944.55 | 2131.24 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 0.00 | 0.00 | 0.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 0.35 | 0.03 | 0.04 |
| 4 | Fees & User Charges | 140 | 5400.95 | 1977.86 | 3399.50 |
| 5 | Sale & Hire Charges | 150 | 0.00 | 0.00 | 0.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 0.00 | 0.00 | 0.00 |
| 7 | Income from Investments | 170 | 650.00 | 850.00 | 900.00 |
| 8 | Interest Earned | 171 | 50.00 | 62.00 | 80.00 |
| 9 | Other Income | 180 | 0.30 | 0.11 | 0.20 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **8086.06** | **4834.55** | **6510.98** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 21700.00 | 13200.00 | 14008.00 |
| 12 | Secured Loans | 330 | 3567.00 | 2068.00 | 1793.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **25267.00** | **15268.00** | **15801.00** |
| | **Total Receipts** | | **33353.06** | **20102.55** | **22311.98** |

# VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## WATER SUPPLY AND DRAINAGE FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 365.64 | 287.70 | 308.48 |
| 15 | Administrative Expenses | 220 | 20.00 | 33.66 | 46.00 |
| 16 | Operations & Maintenance | 230 | 6255.75 | 4584.99 | 5175.50 |
| 17 | Interest & Finance Charges | 240 | 387.19 | 455.19 | 521.82 |
| 18 | Programme Expenses | 250 | 7.50 | 0.00 | 7.00 |
| 19 | Other Liabilities | 350 | 1706.56 | 1629.21 | 1835.05 |
| | **Total** | | **8742.64** | **6990.75** | **7893.85** |
| | **Payments (Capital)** | | | | |
| 20 | Grants, Contribution and Subsidies | 260 | 400.00 | 320.00 | 350.00 |
| 21 | Repayment of Secured Loans | 330 | 180.00 | 142.32 | 167.56 |
| 22 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 23 | Accumulated Depreciation | 411 | 1026.04 | 1036.48 | 1049.29 |
| 24 | Fixed Assets | 410 | 12440.00 | 3980.00 | 4620.00 |
| 25 | Project in Progress | 412 | 10000.00 | 7500.00 | 8000.00 |
| 26 | Loans, Advances and Deposits | 460 | 531.30 | 106.07 | 206.20 |
| | **Total** | | **24577.34** | **13084.87** | **14393.05** |
| | **Total Payments** | | **33319.98** | **20075.62** | **22286.90** |
| | **Surplus/(Deficit)** | | **33.08** | **26.93** | **25.08** |

## VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## ELEMENTARY EDUCATION FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Receipts (Revenue)** | | Rs.in Lakhs | | |
| 1 | Tax Revenue | 110 | 917.58 | 899.11 | 985.43 |
| 2 | Assigned Revenues & Compensations | 120 | 0.00 | 0.00 | 0.00 |
| 3 | Rental Income from Municipal Properties | 130 | 0.00 | 0.00 | 0.00 |
| 4 | Fees & User Charges | 140 | 0.00 | 0.00 | 0.00 |
| 5 | Sale & Hire Charges | 150 | 0.00 | 0.00 | 0.00 |
| 6 | Revenue Grants, Contribution and Subsidies | 160 | 0.00 | 0.00 | 0.00 |
| 7 | Income from Investments | 170 | 0.00 | 0.00 | 0.00 |
| 8 | Interest Earned | 171 | 38.00 | 52.28 | 55.00 |
| 9 | Other Income | 180 | 0.00 | 0.00 | 0.00 |
| 10 | Earmarked Funds | 311 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **955.58** | **951.39** | **1040.43** |
| | **Receipts (Capital)** | | | | |
| 11 | Grants, Contribution for specific purposes | 320 | 100.00 | 200.00 | 150.00 |
| 12 | Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | Unsecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **100.00** | **200.00** | **150.00** |
| | **Total Receipts** | | **1055.58** | **1151.39** | **1190.43** |

## VELLORE CITY MUNICIPAL CORPORATION
## REVISED ESTIMATE 2025-2026 AND BUDGET ESTIMATE 2026-2027
## ELEMENTARY EDUCATION FUND ABSTRACT

(Rupees in lakhs)

| S.No. | Particulars | Code No. | Budget Estimate 2025-2026 | Revised Estimate 2025-2026 | Budget Estimate 2026-2027 |
|---|---|---|---|---|---|
| | **Payments (Revenue)** | | | | |
| 14 | Establishment Expenses | 210 | 25.00 | 24.60 | 26.00 |
| 15 | Administrative Expenses | 220 | 24.00 | 8.90 | 17.00 |
| 16 | Operations & Maintenance | 230 | 135.00 | 300.00 | 335.00 |
| 17 | Interest & Finance Charges | 240 | 0.03 | 0.01 | 0.01 |
| 18 | Programme Expenses | 250 | 0.00 | 0.00 | 0.00 |
| 19 | Other Liabilities | 350 | 61.50 | 46.23 | 54.32 |
| | **Total** | | **245.53** | **379.74** | **432.33** |
| | **Payments (Capital)** | | | | |
| 20 | Grants, Contribution and Subsidies | 260 | 0.00 | 0.00 | 0.00 |
| 21 | Repayment of Secured Loans | 330 | 0.00 | 0.00 | 0.00 |
| 22 | Repayment of UnSecured Loans | 331 | 0.00 | 0.00 | 0.00 |
| 23 | Accumulated Depreciation | 411 | 99.60 | 100.73 | 108.83 |
| 24 | Fixed Assets | 410 | 355.00 | 398.00 | 336.00 |
| 25 | Project in Progress | 412 | 250.00 | 100.00 | 150.00 |
| 26 | Loans, Advances and Deposits | 460 | 0.00 | 0.00 | 0.00 |
| | **Total** | | **704.60** | **598.73** | **594.83** |
| | **Total Payments** | | **950.13** | **978.47** | **1027.16** |
| | **Surplus/(Deficit)** | | **105.45** | **172.92** | **163.27** |